**சுருக்கம்**

பாதாள சாக்கடைத் திட்டம் - நாமக்கல், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழஙகல் (நநி3) துறை

அரசாணை (2ப) எண். 79 நாள் 14.08.2009.

திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 29

படிக்கப்பட்டது:

1) அரசாணை (ப) எண்.407, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள் 7.10.2005
2) அரசாணை (ப) எண்.419, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள் 18.10.2005
3) அரசாணை (3ப) எண்.423, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள் 19.10.2005
4) அரசாணை (ப) எண்.31, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள் 18.8.2004

மேலும் படிக்க :

5) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண். 7214/2006/பாசாதி1 நாள் 27.08.2008

-----

**ஆணை:**

முதலாவது,இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே நாமக்கல், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் காஞ்சிபுரம் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டஙகளை தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் –III ன் (TNUDP– III ) கீழ் பின்வரும் நிதியாதாரஙகளில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழஙகி ஆணைகள் வெளியிடப்பட்டன.

| வரிசை எண் | நகராட்சியின் பெயர் | நிதி நிறுவனஙகளின் கடன் (ரூபாய் இலட்சத்தில்) | தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் –III ன் (TNUDP–III) மானியம் (ரூபாய் இலட்சத்தில்) | பயனாளிகளின் மூலம் உள்ளாட்சி அமைப்பின் பஙகு (ரூபாய் இலட்சத்தில்) | கட்டுமானத்தின் போது வட்டி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 948.43 | 188.40 | 747.17 | 133.00 |
| 2 | தூத்துக்குடி | 2601.61 | 464.00 | 1574.39 | – |
| 3 | விருதுநகர் | 1222.28 | 232.50 | 870.23 | – |
| 4 | காஞ்சிபுரம் | 245.00 | 300.00 | 714.00 | – |

2. மேற்கூறப்பட்ட அரசாணைகள் தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) பின்வருமாறு கடன் மற்றும் மானியஙகளை ஒப்பளிப்பு செய்ததாக ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

| வரிசை எண் | நகராட்சியின் பெயர் | கடன் (ரூபாய் இலட்சத்தில் ) | மானியம் (ரூபாய் இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | நாமக்கல் | 688.26 | 565.31 |
| 2 | தூத்துக்குடி | 2601.61 | 1000.00 |
| 3 | விருதுநகர் | 1006.59 | 697.50 |
| 4 | காஞ்சிபுரம் | 186.91 | 374.41 |

3. மேற்குறித்த திட்டஙகளுக்கு திட்ட மதிப்பீட்டில் முப்பது சதவீத மானியம் (30%) அல்லது ரூ.10 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டதென்றும், இவற்றில் தோன்றுகின்ற வித்தியாசத் தொகைக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிதியை ( O&M Gap Fund) கட்டுமானத்திற்குப் பின் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கு, உள்ளாட்சி அமைப்புகள் உரிய மானியத் தொகையை மூலதன வேலைகளுக்கு ஒப்பளிப்பு செய்யக் கோருவதாகவும், கட்டுமான காலத்தின் போது வைப்புத் தொகையை திரட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்புகள் சிரமப்படுவதாகவும், எனவே மேற்கூறப்பட்டவற்றை ஒரு பொருளாக ஆறாவது மாநில அளவிலான திட்ட அஙகீகரிப்பு கூட்டத்தில் (Sixth State Level Project Sanctioning Committee) வைக்கப்பட்டு, .அக்கூட்டத்தில் மேற்கண்ட நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்திட திருத்திய நிர்வாக ஒப்புதல் வழஙகலாமென பின்வரும் பரிந்துரைகளுடன் கூடிய ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

1 ரூ.688.26 இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.565.31 இலட்சஙகள் மானியத்தில் நாமக்கல் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக ஒப்புதல் வழஙகவும் ;

2 ரூ.2446.74 இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.1000.00 இலட்சஙகள் மானியத்தில் தூத்துக்குடி பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக ஒப்புதல் வழஙகவும் ;

3 ரூ.1006.59 இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.697.50 இலட்சஙகள் மானியத்தில் விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக ஒப்புதல் வழஙகவும் ;

4 ரூ.424.96 இலட்சஙகள் கடன் மற்றும் ரூ374.41 இலட்சஙகள் மானியத்தில் காஞ்சிபுரம் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக ஒப்புதல் வழஙகவும் தீர்மானித்துள்ளது .

**4.** மேற்கண்ட சூழ்நிலையில், ஏற்கனவே நிர்வாக அனுமதி வழஙகப்பட்ட முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளுக்கு மேலே பத்தி–3ல் குறிப்பிட்ட நிதியாதாரஙகளின் அடிப்படையில் திருத்தஙகளை அளிக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**5.** நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, ரூ.**688.26** இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.**565.31** இலட்சஙகள் மானியத்தில் நாமக்கல் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், ரூ.**2446.74** இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.**1000.00** இலட்சஙகள் மானியத்தில் தூத்துக்குடி பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும் , ரூ.**1006.59** இலட்சஙகள் கடன் மற்றும் ரூ.**697.50** இலட்சஙகள் மானியத்தில் விருதுநகர் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும், மற்றும் ரூ.**424.96** இலட்சஙகள் கடன் மற்றும் ரூ**374.41** இலட்சஙகள் மானியத்தில் காஞ்சிபுரம் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்தவும் திருத்திய நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.**31948** /MAWS/ **09**, நாள் **24.7.2009**–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம், சென்னை– 600 018,
சம்மந்தப்பட்ட நகராட்சிகளின் ஆணையர்கள் ( நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக )
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
மாநில கணக்காயர், சென்னை – 600 018. (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறைத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

**<u>நகல்:</u>** மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர்,
சென்னை– 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (வரவு செலவு / அநமு.II / நநி.2) துறை, சென்னை– 600 009.
நிதித் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல்) துறை, சென்னை–600 009.
இ.கோ./உதிரி நகல்.

.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.